# தோ புவான் **உமா சம்பந்தன் அக்ராசனர்**
# தேசிய நில நிதி கூட்டுரவு சங்கம்
# உத்தமரின் கனவு

1970ல் ஒரு நாள் காலை மணி 6.45 - 7.00 இருக்கும், துன் சம்பந்தனவர்கள் காலையில் காப்பியருந்தும் வேளை, நாங்கள் அப்பொழுது தங்கியிருந்த் கிளிமார்ட் தெருவிலுள்ள வீட்டின் மேற்பகுதியின் நடுவிலுள்ள அறையில் உட்கார்ந்திருந்தார்கள். காப்பியை கொண்டு வந்த என்னிடம் "உமா; விடியற்காலையில் கண்ட கனவு பலிக்கும் என்பார்ளே" என்று கேட்டார்கள். "ஆம், அப்படித்தான் ஒரு நம்பிக்கை" என்று பதிலளிதேன்.

"நான் எழுந்திருக்கும் முன் கண்ட கனவை கனமாகக் கூறுறேன் கேள்" என்று கீழ்க் கண்டவாறு கூறினார்கள்.

" ஒரு வணக்கத்திற்குரிய பெரியவரும் நானும் இருக்றோம். (வீட்டின் கீழ்ப் பகுதியில் வரவேற்பு அறையில்) வயது முதிர்ந்து மிகவும் பக்திமானாகக் காணப்படும் அந்த பெரியவரின் திருக்கைகளில் இரண்டு பாத ரக்ஷைகளை ஏந்திக் கொண்டிருக்கிறார்கள். என்னை கனிவுடன் பார்த்துக் கொண்டே அவற்றை என்னிடம் தருகிறார்கள். நான் பக்கத்தில் அவற்றை வைக்கும் தருவாயில், அப்பெரியவர் என்னிடம் சொல்லுகிறார். "இவை ஶ்ரீ ராமரின் பாதுகைகள், பத்திரமாக நல்ல இடத்தில் வைக்கவும் என்று. உடனே எனது கைக்கெட்டும் உயரத்தில் இருந்த மரப் பலகையில் வைக்கிறேன். கனவும் கலைந்துவிட்டது எழுந்துவிட்டேன்".

இவ்வாறு கனவைக் கூரிய துன் அவர்கள் கேட்டார்கள், "அந்த பெரியவர் யார்?" ஶ்ரீ அனுமாராக இருக்கலாமோ? இந்த கனவு என்று சிறிது நேரம்யோசித்துக் கொண்டே இருந்தார்கள். காப்பியும் ஆறிப்போனது.

பிறகு நிதானத்துடன் ஒரு முடிவெடுத்த நிலையில் தொடர்ந்து கூறினார்கள், தென்கிழக்கு ஆசியாவில் நாமிருக்றோம். இராமயணக் கதை இங்குகோயில்கள், நாட்டிய நாடகங்கள், நிழலாட்டங்கள்,போன்ற கலை உருவங்களில் இன்னமும் இருக்கின்றது. பல இனங்கள் ஒற்றுமையாக வாழும் நம் நாட்டில் இதுவரையில் ஒரு பெரிய இராமர் கோயில் கட்டப்படவில்லை. அதைச் செய்வதற்கான உத்தரவாக இந்தக் கனவை நான் கருதுகிறேன்".

1. இந்தக் கோயிலின் அமைப்பைச் சுற்றி கிழக்காசியாவிலுள்ள இந்தோனிசியா, தாய்லாந்து (சியாம்), கபோச்சியா போன்ற நாடுகளிலுள்ள சிற்ப முறைகளை ஒட்டிய இராமாயண சித்திரங்களை, சித்திரகூடமாக அமைக்கவேண்டும். ஶ்ரீ அனுமாருக்கு தனி சன்னதி அமைக்க வேண்டும்.
2. நமதுகூட்டுறவு தோட்டமான கோலப் பேராக் பகுதியில் இராமரை வழிபடும் மக்கள் அதிகமாக உள்ளார்கள். அங்கு கோயிலைக் கட்டவேண்டும்.
3.கோயில் சிற்பக் கலையில் சிறந்தவர்களைக் கொண்டு அந்தத் திருப்பணியை மேற்கொள்ள வேண்டும்.

அன்று சொல்லிய வைத்ததுபோல் சிவச்சாரியார் தி.ச. சம்பந்மூர்த்தியவர்கள் எங்களது இல்லத்தில் விருந்தாளியாக தங்கியிருந்தார்கள். அவரிடம் இந்த விஷயங்களை கூறியதும் இவ்வாண்டில் 3 "வாஸ்து"பூஜை நாட்களிருக்கின்றன. இன்னும் ஒரே நாளிருக்கின்றது. துன் அவர்கள் முடிவெடுத்தவுடன் கோயிலுக்கு வாஸ்து சாந்தி செய்து விடலாமென்றார்கள்.

கனவைக் கண்ட சில தினங்களில் அங்கு சென்று வாஸ்து சாந்தி செய்யப்பட்டு,கோயில் கட்டும் வேலை ஆரம்பிக்கப்பட்டது.

தனது பொது வாழ்க்கையில் ஆரம்பித்த காலத்தில் மக்களின்சேவையே வழிபாடு என்ற எண்ணம் ஓங்கி, தனது பணியைமேற்கொண்டகூட்டுறவுத் தந்தையவர்கலின் கடைசி பத்தாண்டுகளின்ல் “பிரபத்தி” என்ற ஆண்டவன் பூங்கழலில் சரணாகதியடைதலேயே ஆனந்தம் கண்டார்கள்.

“ அறந்தால் வருவதே இன்பம்” என்றார் வள்ளுவர், பொருளும் இன்பமும் அறத்தைப் பின்பற்றியதாவே வாழ்க்கை அமைய வேண்டும். அது தான் இராமாயணம் கற்பிக்கும் முக்கியமான பாடம்.

“தப;தவ” எனும் சொல்லில் இராமாயணம் தொடங்குகிறது.
பொருளையும் இன்பத்தையும் அறத்தி/ர்கு அடிமைப்படுத்தவதே தவம்.
இராமாயணத்தில் எலோரும் தவர் புரிகின்றனர்.
தவம் எனும் சொல்லிற்கு நீண்டதொரு வியாக்கியானமாக இராமாயணம் விளங்குகிறது.

“நன்மையும் செல்வமும் நாலும் நல்குமே
திண்மையும் பாவமும் சிதைந்து தேயுமே
ஜன்மமும் மரணமும் இன்றித் தீருமே
இம்மையே ராம என்ற இரண்டெழுத்தினால்” என்கிறார் கம்பர்.

ஸ்ரீ ராம ஜெயராம் ஜெய ஜெய ராம்......